# அம்பாறை மாவட்ட மத்தியஸ்தசபைகளும் சமூகப் பிரச்சினைகளின் கையாள்கையும்

[1]எம்.எப்.ஹஸ்மத் பஹீமா , [2]எம்.வை.மின்னதுல் சுஹிறா
[1 & 2] Faculty of Islamic Studies and Arabic Language , South Eastern University of Srilanka
[1]faheehaz9779@gmail.com, [2]zuheera@seu.ac.lk

**ஆய்வுச்சுருக்கம்**

மக்களிடையே ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதற்காக உலக நாடுகள் ஒவ்வொன்றும் பல்வேறு தந்திரோபாய வழிகளை கையாண்டு வருகின்றன. உத்தியோகபூர்வமான சட்ட நீதி அமைச்சுகளால் வழங்கப்படும் நீதிமன்ற செயற்பாட்டிற்கு அப்பால் 1990 ஆம் ஆண்டுகளில் 'பிணக்குகளை தீர்ப்பதற்கான மாற்றுவழிகள்' Alternative Dispute Resolution- ADR எனப்படும் செயன்முறை பொதுவாக பரவலாக உலகெங்கிலும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறே இலங்கையிலும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நீதிச் செயன்முறைகளுக்கு அப்பால், மத்தியஸ்தம் எனும் முறைமையும் செயற்பட்டு வருகின்றது ( At -torney Generalis Department , 1990 ). அந்த வகையில் சில சமூகப் பிரச்சினைகளை மத்தியஸ்தம் செய்வதன் மூலம் பிரச்சினைகளிற்குட்பட்ட மனிதர்களுக்கு மத்தியில் இணக்கப்பாட்டை கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்தி வைக்கும் வகையில் தோன்றிய அமைப்பொன்றாக இது விளங்குகிறது . இவ்வகையில் சுமார் 33 வருடகாலமாக இலங்கையில் இம்மத்தியஸ்த சபைகள் செயற்பட்டுவருகின்றன. இம்மத்தியஸ்த சபைகளில் அண்மைக்காலமாக கொண்டுவரப்படுகின்ற பிரச்சினைகளும், அவற்றைத் தீர்ப்பதற்கான காலங்களும் அதிகரித்துள்ளன. இவ்வகையில், மத்தியஸ்த சபைகளிற்கு கொண்டுவரப்படுகின்ற பிரச்சினைகள் பற்றிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது. இதற்கமைய இவ்வாய்வானது மத்தியஸ்த சபைகளிற்கு அண்மைக்காலங்களில் இணக்கப்பாட்டிற்கு வருகின்ற பிரச்சினைகளின் போக்கை அடையாளப்படுத்தல், அத்தகைய பிரச்சினைகளை வகைப்படுத்தல் ஆகிய நோக்கங்களை உள்ளடக்கியுள்ளது. இதனை ஆராயும் முகமாக அளவுசார் ஆய்வு முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்விற்கு வலுச்சேர்க்கும் வகையில் நூல்கள், சஞ்சிகைகள்,இணையத்தள கட்டுரைகள் மற்றும் ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வு அறிக்கைகளும், அரச ஆண்டறிக்கைகள் ஆகிய இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கான தரவுகளைப் பெற்றுக் கொள்ள ஆய்வு மாதிரியாக, அம்பாறை மாவட்டத்தில் செயற்பட்டுவருகின்ற மத்தியஸ்த சபைகளில் நிந்தவூர்ப்பிரதேச மத்தியஸ்த சபை தெரிவு செய்யப்பட்டு, 05 வருடகாலப் பகுதிக்குள் செயற்பட்டுவருகின்ற விடயங்கள் ஆய்வுக்காக தெரிவுசெய்யப்பட்டன. பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் கணனித்தரவுகள் வழியாகப் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் முடிவாக, கடந்த 05 வருடங்களாக் மக்களிடையே பிணக்குகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன். மத்தியஸ்த சபையின் கீழ் கொண்டுவரப்படும் அதிகளவு வழக்குகள் பணத்துடன் தொடர்பானதாக் காணப்படுகின்றன. இவற்றில் வங்கிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புடைய பிணக்குகள் முதல்நிலையானதாகவும், இரண்டாம் மூன்றாம்

நிலையில் வன்முறைசார்பிணக்குகளும் காணி நிலங்களுடனான பிணக்குகளும் காணப்படுகின்றன. எனவே அதிகரித்துவருகின்ற பிரச்சினைகளுக்கான அடிப்படைக்காரணங்களை இணங்கான்பதற்கும், அவற்றைக் குறைப்பதற்கான கொள்கைகள் உருவாக்கவேண்டும் என்பதனை இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது.

**திறவுச் சொற்கள் :** மத்தியஸ்த சபை, சமூகப்பிரச்சினைகள், வடிவங்கள், அண்மைக்காலப் போக்கு.

**ஆய்வு அறிமுகம்:**

மத்தியஸ்தம் என்பது தொடர்பான நீதி அரசியலமைப்பு அமைச்சின் அறிக்கையானது (1994) ஏதேனும் பிரச்சினைகளின் போது அதை தீர்த்துக் கொள்வதற்காக பிணக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு கட்சிகளினதும் விருப்பத்துடன் மூன்றாம் நபர் ஒருவர் தலையிட்டு கலந்தாலோசனையின் மூலம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதாகும் என்கின்ற விளக்கத்தை முன்வைக்கின்றது. இம்மத்தியஸ்தம் என்பது சர்வதேச மோதல்களில் மிகப் பழமையான மற்றும் மிகவும் ஆரம்பமான மோதல் தீர்க்கும் வழிமுறைகளில் ஒன்றாக அமைந்திருக்கின்றது (Wehr & Paul, 1991).

பொதுவாக விகவாகரம் ஒன்றில், நடுவர் மூலம் பிணக்குகளை தீர்த்தல், வழக்காடும்முறை மற்றும் பேச்சுவார்த்தை செயற்பாட்டின் மூலம் சமரசம் செய்தல் ஆகிய பல வகையான செயற்பாடுகளில் திருப்தியற்ற நிலையை உணர்ந்த பின் உலக நாடுகள் மத்தியஸ்தம் எனும் செயற்பாட்டினை நோக்கி நகர்ந்ததாக மத்தியஸ்தம் தொடர்பான வரலாறுகள் குறிப்பிடுகின்றன (Houzhi, 2015). ஆசிய கண்டத்தில் சீனா (ஹொங்கொங்கில் பிரதான மத்தியஸ்த நிலையம்), இந்தியா (1996), சிங்கப்பூர் (1997), இலங்கை (1990), துபாய் போன்ற நாடுகளிலும், ஐரோப்பிய கண்டத்தில் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி (1993), ஸ்வீடன் (1999), நோர்வே, பெல்ஜியம், நியூசிலாந்து நாடுகளிலும் அமெரிக்க கண்டத்தில் கனடா, அர்ஜென்டினா (2010), நெதர்லாந்து, கொரியா, ஹங்கேரியா, சவுதி அரேபியா போன்ற இன்னும் பல நாடுகளிலும் மத்தியஸ்த சபை இயங்கிக் கொண்டு வருகின்றன (Houzhi, 2015). சமகாலத்தில் மத்தியஸ்த செயன்முறையானது தரப்பினரின் உரிமைகளை முன்னுரிமைப்படுத்துவதை விட, தரப்பினரின் விருப்புகளில் அதிக கவனம் செலுத்துகின்றது என்கின்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது (Lim and Xavier, 2002). மேலும், முஹம்மட் (2008) என்பவர், நீதிமன்றங்களில் அதிகமான வழக்குகள் எஞ்சி இருப்பதையும், அதிகளவான செலவுகளையும், நேர வீண்விரயங்களையும் ஏற்படுத்துவதனைக் கவனத்தில் கொண்டு இவ்வகையை சவால்களை முறியடிப்பதற்காக மத்தியஸ்த சபைகளும், மத்தியஸ்த சட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன என்கின்றார். எனவே மத்தியஸ்த செயன்முறைகள் தொடர்பான இக்கருத்துக்கள் மக்களுக்கிடையில் ஏற்பட்டு வருகின்ற அதிகரித்த பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதுடன், அவற்றிற்கு விரைவான தீர்வினை வழங்கும் செயன்முறையாக அமைவதனை அடையாளப்படுத்துகின்றன.

இவ்வகையில், இலங்கையிலும் சுதந்திரம் அடைந்ததன் பின்னர் மக்களுடைய பிரச்சினைகளை உரிய பிரதேசத்திலேயே தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதற்காக

வேண்டி, 1958 ஆம் ஆண்டு 10ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், குடிமக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நல்லிணக்க சபை ஏற்படுத்தப்பட்டது (நீதி அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சு, 1994). இச்சட்டம் குடிமக்களுடைய குடிசார், குற்றவியல் பிணக்குகளை எளிதாகவும், விரைவாகவும் நீதிமன்றம் போலல்லாது ஜனநாயக ரீதியிலும் தீர்க்கக் கூடியதாக இருந்தது. மேலும் 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பு கொண்டுவரப்பட்ட பின்னர் இச்செயற்பாடுகள் வழக்கிழந்துபோயின. இருப்பினும், சமூகத்தில் உருவாகும் சிறு பிணக்குகளைத் தீர்க்கவும், நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படும் வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதனை எதிர்பார்ப்பாகக் கொண்டும் இலங்கையில் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவானது மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது (Coory , 1995). இத்தகைய மத்தியஸ்த சபைகளானது, 1988 ஆம் ஆண்டு 72ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றுவரை சில சட்டச் திருத்தங்களுடன் இயங்கி வருகின்றன. இன்று நாடு முழுவதும் சுமார் 329 மத்தியஸ்தசபை 7000 க்கும் அதிகமான மத்தியஸ்தர்களை கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது (MBR.2019). இச்சபைகளின் அதிகரிப்பானது, மத்தியஸ்த சபைகளின் தேவைப்பாட்டினை எடுத்துக்காட்டுகிறது.

அட்டவணை 01 : 2014தொடக்கம் 2018 வரையான கால எல்லைக்குள் இலங்கையின் அனைத்து மத்தியஸ்த சபைகளிற்கும் கொண்டு வரப்பட்ட பிணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மாகான ரீதியாக).

| மாகாணங்கள் | வருடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
| மேல் மாகாணம் | 51040 | 47615 | 45640 | 41245 | 26206 |
| வடக்க மாகாணம் | 16700 | 11023 | 17533 | 12349 | 4446 |
| கிழக்கு மாகாணம் | 21303 | 17567 | 10550 | 14076 | 10280 |
| மத்திய மாகாணம் | 24822 | 26052 | 28031 | 22033 | 17089 |
| தெற்கு மாகாணம் | 23282 | 24507 | 30663 | 23905 | 16812 |
| வட மேல் மாகாணம் | 22690 | 22867 | 31418 | 34620 | 21900 |
| வட மத்திய மாகாணம் | 20657 | 17144 | 20949 | 13281 | 8147 |
| ஊவா மாகாணம் | 12195 | 7433 | 13158 | 9899 | 8181 |
| சப்ரகமுவ மாகாணம் | 17837 | 17335 | 20432 | 19158 | 11607 |

**மூலம்:** 2014,2015,2016,2017,2018 ஆகிய ஆண்டுகளிற்கான இலங்கை நீதி அமைச்சின் ஆண்டறிக்கைகள்.

மேற்குறிப்பிட்ட அட்டவணையின் படி, 2014 ஆம் ஆண்டு 2,10,535 பிணக்குகள் காணப்பட்டது. இலங்கையின் மொத்த மத்தியஸ்தசபைகளின் பிணக்குகள் 2018 ஆம் ஆண்டு 2,48,805 எண்ணிக்கையாக அதிகரித்துள்ளது. இவ்வறிக்கை மத்தியஸ்த சபைகளிற்கு கொண்டு வரப்படும் பிணக்குகளின் எண்ணிக்கையை போலவே மத்தியஸ்தசபைகளால் ஆற்றப்படும் வழக்குகளின் எண்ணிக்கையும் அதிகமாகும் என்பதனை வெளிப்படுத்துகின்றது.

இவ்வகையில், நிந்தவூர் பிரதேச மக்களின் பல சமூகசார் பிரச்சினைகளை இணக்கப்பாட்டிற்கு கொண்டுவரும் செயற்பாட்டை ஆரம்பகாலங்களில் பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபை மூலமே விசாரித்து தீர்த்து வைக்கப்பட்டன (Social organization report, 2021). இருப்பினும், நிந்தவூர் பிரதேசத்தை மையமாகக் கொண்டு , 1998 ஆம் ஆண்டு மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பிரதேசத்தின் பிணக்குகளை கையாள்வதில் மத்தியஸ்த சபை செல்வாக்குச் செலுத்தி வருகின்றது (மத்தியஸ்த சபை அறிக்கை, 2015). இவ்வகையில் இவ்வாய்வானது மத்தியஸ்தசபைகள் தலையீடு செய்கின்ற பிணக்குகளையும், அதன் வகைகளையும் அடையாளப்படுத்த முனைவதுடன், சமகாலத்தில் மத்தியஸ்தசபைகளில் செல்வாக்குச் செலுத்துகின்ற பிரச்சினைகளையும் அடையாளப்படுத்துகின்ற வகையில் மத்தியஸ்த சபைகள் தொடர்பாக ஆராய்கின்றது.

இலங்கையில் உள்ள மத்தியஸ்த சபைகள் அனைத்திற்கும் பிணக்குகள் பொதுமக்கள் மூலமாக (சுயவிருப்புடன் தாமாகவும்), பொலிஸ் நிலையங்களில், நீதிமன்றங்களில் இங்கிருந்து (வழக்கு தாக்கல் செய்யும் அல்லது முறைப்பாடு செய்யும் பிரதேச எல்லைக்குட்பட்ட மத்தியஸ்த சபைகளிற்கும்) வங்கிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள் ஆகிய மேற்கூறிய நான்கு வழிமுறைகளின் ஊடாக மத்திய சபையை நோக்கி பிணக்குகள் கொண்டுவரப்படுகின்றன (Siriwardhana , 2011). மேலும் இங்கு நிதி தொடர்பான,கடன் தொடர்பான பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள்,வன்முறை தொடர்பானவை, தாக்குதல், அவதூறு போன்றவைகளும் இன்னும் சில சிறிய பிரச்சினைகள், திருமண கொடுக்கல் வாங்கலுடனான பிரச்சினைகள், அபகரிப்பு செய்தல், உரிமை மீறல்கள் தொடர்பான பிரச்சினைகள் என பல வகையான சமூக பிரச்சினைகள் சபைக்கு ஆற்றப்படுத்துவதற்கு கொண்டு வரப்படுகின்றன. ( Alexander , 2002).

**ஆய்வுப் பிரச்சினை**

நீதி அமைச்சு ஆண்டறிக்கைகளானது (2014, 2015, 2016, 2017, 2018) மத்தியஸ்த சபைகளினது சமூகப் பிரச்சினைகளை பணம், நேரம், வளம் விரயம் இன்றி நீதிமன்றத்தினை விட பிணக்குகள் இலகுவாகத் தீர்த்து வைக்கப்படும் சபையாக காணப்படுகின்றது என்பதனைச் அடையாளப்படுத்துகின்றன. அந்த வகையில் பல்வேறு வகையான பிரச்சினைகள் பல்வேறு வழிமுறைகளில் கொண்டுவரப்படுகின்றன. இருப்பினும் மத்தியஸ்த சபை நடைமுறைப்படுத்தப்பட்ட காலம் முதல் இன்றுவரை இப்பிரச்சினைகள் ஒரே வகையானதாக அமையப் பெறவில்லை என்பதனை ஆய்வு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும், பிரச்சினைகளின் வடிவங்கள் காலத்திற்குக்காலம் பல்வேறு வகைப்பாட்டைக் கொண்டு காணப்படுகின்றன. இலங்கையில் நீதித்துறையில் மத்தியஸ்த

செயல்முறைகள் பற்றிய அதிகமான அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இருந்த போதிலும் மத்தியஸ்த சபைகளுக்கு வருகின்ற பிரச்சினைகளின் வகைகள் தொடர்பான மற்றும் அதன் வகைப்பாடுகள் தொடர்பான விடயங்களும் சமூகத்தில் உருவாகியுள்ள பிரச்சினைகளையும், அதன் மாற்றங்கள்,வளர்ச்சி பற்றியும் விளங்கிக் கொள்ளவது அவசியமாகின்றது. ஏனெனில் அண்மைக்காலமாக மத்தியஸ்த சபைகளுக்கு வருகின்ற பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதில் பல்வேறு சவால்கள் எழுந்துள்ளததாகவும், முன்னைய காலங்களை விட சிக்கலானதும், அதிகமான பிரச்சினைகள் காணப்படுவதாகவும் இவற்றினைத் தீர்ப்பதற்கான புதிய அணுகுமுறைகள் தேவைப்படுவதாகவும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே இத்தகைய தகவல்கள் எவ்வளவு துாரம் உண்மையானது? என்கின்ற உண்மைத் தன்மையினைக் கண்டறிவது தொடர்பான பிரச்சினையை ஆய்வுப் பிரச்சினையாக முன்வைக்கின்றது.

அதேபோல, சமூக பிரச்சினைகள் எந்த வழிகளில் அதிகம் கொண்டுவரப்படுகின்றன. என்பன பற்றிய தனியான ஆய்வுகள் இதுவரை இடம்பெறவில்லை. இவ்வகைளில் இவ்விடைவெளியை அடிப்படையாகக் கொண்டு, நிந்தவூர்ப் பிரதேசத்தில் இவ்விடயம் தொடர்பாக எத்தகைய நிலமைகள் காணப்படுகின்றன? என்பதனை இவ்வாய்வு பிரச்சினையாக அடையாளப்படுத்துகின்றது.

**ஆய்வு நோக்கம் :**

ஆய்வுப் பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு, இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை முன்வைக்கின்றது.

1. மத்தியஸ்த சபைக்கு வருகின்ற சமூகப் பிரச்சினைகளின் போக்கை அடையாளம் காணல்.
2. மத்தியஸ்த சபைக்கு வருகின்ற சமூகப் பிரச்சினைகளை வகைப்படுத்தல்.

**ஆய்வு முறையியல் :**

**ஆய்வுப் பிரதேசம்**

அந்தவகையில் இலங்கையில் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் கிழக்கே அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் முஸ்லிம், தமிழ் இனத்தவரைக் கொண்ட 25 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய கரையோர பிரதேசமே நிந்தவூர் பிரதேசமாகும் (நிந்தவுர் பிரதேச செயலகம், 2020). இப்பிதேசத்தில் சுமார் 31734 சனத்தொகை எண்ணிக்கை காணப்படுகின்றன பிரதேச செயலகம், 2020)). இவர்கள் விவசாயம், மீன்பிடி ஆகியனவற்றை பிரதான தொழிலாகவும், அரச தொழில்கள், வியாபாரம், தச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு என பல்வேறு தொழில்களை இரண்டாம் நிலையான தொழில்களாகவும் மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.


ISBN 978-624-5736-14-0

**ஆய்வு மாதிரி**

அம்பாரை மாவட்டத்தில் சுமார் 65 மத்தியஸ்த சபைகள் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் சிங்கள, முஸ்லிம், தமிழ் ஆகியமூவினங்களும் வாழ்வதனால் அவரவர்களின் இனக்குழுமங்களை அடிப்படையாகக் கொண்டு மூவினங்களிலும் மத்தியஸ்தசபைகள் இயங்குகின்றன. மத்தியஸ்தசபை தொடர்பான இவ்வாய்வில் அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர்ப் பிரதேசத்தில் இயங்குகின்ற மத்தியஸ்தசபை இவ்வாய்வில், ஆய்வு மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஆய்வு நோக்கங்களை பூர்த்தி செய்வதற்காக அளவுசார் ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டது. முதலாம், இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டன. முதலாம் நிலை தரவுகளாக கட்டமைக்கப்படாத நேர்காணல்களும் மேலும் இரண்டாம் நிலைத் தரவுகளாக 2014 தொடக்கம் 2019 வரையான நிந்தவூர் மத்தியஸ்த சபையின் பிணக்கு பதிவு புத்தகங்களும் இணைய கட்டுரைகளும் மத்தியஸ்தர்களுக்கான நாட்குறிப்பேடுகளும் மற்றும் சென்ற வருடங்களின் முன்னேற்ற அறிக்கை (அரசு வெளியீடுகள்), ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கைகள் முதலியன பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வினை குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள மத்தியஸ்த சபையில் கடந்த 05 வருடங்களில் மத்தியஸ்த சபைக்கு வந்துள்ள பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாய்வை வலுப்படுத்துவதற்காக key informant interview 05 நபர்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சேகரிக்கப்பட்ட தரவுகள் பண்பியல் ரீதியான தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கும், எண்ணியல் தரவுகளானது, கணணிப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறை மூலமும் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது.

**கண்டுபிடிப்புக்களும் கலந்தரையாடலும் :**

**மத்தியஸ்த சபைகளிற்குக் கொண்டுவரப்படுகின்ற பிரச்சினைகளின் போக்கு**

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நிந்தவூர் பிரதேச மக்களுக்கு மத்தியில் ஏற்படும் குற்றவியல் சார் பிணக்குகளை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் விசாரிக்கப்படுவதற்கான முறைமை காணப்படுகின்றது (பொலிஸ் நிலைய அறிக்கை, 2019). இதற்கமைய நிந்தவூர் பிரதேசத்தில் எழுகின்ற பிரச்சனைகளில் குறிப்பிடத்தக்க வரையறுக்கப்பட்டுள்ள பிரச்சினைகள் குறிப்பாக, குடும்பப் பிரச்சினைகள், ரூபா 25 000.00 ற்கு உற்பட்ட பணப்பரிமாற்றம் தொடர்பான பிரச்சினைகள் ஆகியன பொலிஸ் நிலையத்தினுாடாக மத்தியஸ்தம் கருதி மத்தியஸ்த சபைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. ஏனையவை நீதிமன்றங்களிலும் விசாரிக்கப்படுகின்றன. நீதிமன்றங்களில் கொலை, கொள்ளை, விபச்சாரம், கணவன் மனைவி பிரச்சினைகள், போதைவஸ்து பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறை போன்ற சமூக பிரச்சினைகள் வழக்காடப்படுகின்றன. இத்தகைய பிரச்சினைகளில் பிரதேச மட்டத்தில் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் பொறிமுறையில் அமைக்கப்பட்டுள்ள மத்தியஸ்த


ISBN 978-624-5736-14-0

சபைகளுக்கு நீதி மன்றங்களின் வழியாகவும் பிணக்குகள் கொண்டுவரப்படுகின்றன (நீதிமன்ற அறிக்கை,1999).

தரவுகளின்படி, இவ்வாய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் மத்தியஸ்தசபைக்கு கொண்டுவரப்படுகின்றன பிரச்சினைகள் பற்றிய அட்டவணை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.


**அட்டவணை- 02** நிந்தவூர் மத்தியஸ்த சபையிற்கு கொண்டுவரப்பட்ட பிணக்குகள்.

**மூலம்**: மத்தியஸ்த்த சபை வழக்குப்பதிவுப் புத்தகம் (2014-2019) , நிந்தவூர்.

| வருடம் | வங்கி மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள் | பொது மக்கள் | பொலிஸ் | நீதி மன்றம் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 2014 | 35 | 160 | 112 | 26 | 333 |
| 2015 | 91 | 95 | 40 | 38 | 264 |
| 2016 | 122 | 61 | 40 | 14 | 237 |
| 2017 | 52 | 92 | 54 | 11 | 209 |
| 2018 | 191 | 87 | 24 | 32 | 334 |
| 2019 | 200 | 97 | 34 | 74 | 405 |
| மொத்த எண்ணிக்கை | 691 | 592 | 304 | 195 | 1782 |

நிந்நவூர் மத்தியஸ்த சபை 2014 தொடக்கம் 2019 வரையில் கொண்டுவரப்பட்ட பிரச்சினைகளானது ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த 05 வருடகாலத்தினுள் சுமார் 1783 பிணக்குகள் மத்தியஸ்த சபைக்கு வந்துள்ளன. சராசரி வருடம் ஒன்றிற்கு 357 வழக்குகள் வந்தடைகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய பிரச்சினைகள் பொதுமக்கள்,வங்கிகள், பொலிஸ் நிலையம், நீதிமன்றங்களில் இருந்து கொண்டுவரப்பட்டமை அவதானிக்க முடிகின்றது.


மேலும் இந்த நான்கு வழிகளில் இருந்து கொண்டு வரப்படும் பிரச்சினைகளில் எண்ணிக்கையின் அதிகரிப்பு பற்றி வரைபுகள் விளக்குகின்றன. வரைபு – 01: 1998-2003 மற்றும் 2014-2019 வரையிலான பிரச்சினைகளின் வருகை தொடர்பான எண்ணிக்கை




மூலம்: கள ஆய்வுத் தகவல்,2021.

மேலுள்ள வரைபின்பிரகாரம் பிரச்சினைகளின் வருகையானது அதிகரித்திருப்பது குறிப்பிடப்பட்டிருக்கின்றது.மேலும் சில பிரச்சினைகள் (தொழில்முறைகளில் சம்பளம் கொடுப்பது) தொடர்பான பிரச்சினைகள் குறைவடைந்தும் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பிரச்சினைகள் குறைவடைந்தமையினால் தற்போது இப்பிரதேசத்தில் தொழில்புரிகின்றவர்கள் இணைந்து தொழிற்சங்கங்களை அமைத்துள்ளதாகவும் இதனால் ஒரு பலமான சக்தியாக அவர்கள் விளங்குவதனால், தொழிலில் கூலி தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகளை தொழிற் குழுக்களுக்குள் தீர்த்துக் கொள்முடிவதாகவும் இதனால் இத்தகைய பிரச்சினைகள் குறைவாக இருப்பதாகப் பெரும்பாலனவர்கள் கருத்து தெரிவித்தனர் .இது பற்றி கீழுள்ள வரைபின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

வரைபு:2 பிரச்சினைகளின் வருகை தொடர்பான எண்ணிக்கைகள்





| | கடன் தொடர்பான பிரச்சினை | வன்முறை | பணக் கொடுக்கல் வாங்கல் | நகை தொர்பான பிரச்சினை | காணி மற்றும் உறுதிப்பிரச்சினை | குடும்பப் பிரச்சினை | தொழில் மற்றும் நிதி மோசடி | கூலி கொடுக்காமை தொடர்பான பிரச்சினை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1998-2003 | 399 | 55 | 159 | 60 | 20 | 27 | 28 | 39 |
| 2004-2019 | 840 | 272 | 170 | 71 | 47 | 32 | 15 | 13 |
| ஊழடரஅடு1 | | | | | | | | |

**மூலம்:** கள ஆய்வுத்தகவல்,2021


ISBN 978-624-5736-14-0

இவ்வாய்வின் படி நிந்தவூர் மத்தியஸ்த சபைக்கு கொண்டுவரப்படும் பிரச்சினைகள் எவ்வழிகளின் பால் அதிகம் கொண்டுவரப்பட்டமை என்ற ஆய்வின் பிரகாரம் தொகுக்கப்பட்ட தரவுகளின் படி கீழுள்ள வரைபு வரையப்பட்டுள்ளது.

வரைபு: 03 2014-2019வரை கொண்டுவரப்பட்ட பிரச்சினைகளிற்கான வழிகள்.





**மூலம்** கள ஆய்வுத் தகவல்,2021

ஆய்வுப் பிரதேசத்தில் வங்கி மற்றும் கடன்வழங்கும் நிறுவனங்கள்,பொலிஸ் நிலையங்கள்,பொதுமக்கள் மற்றும் நீதி மன்றங்கள் ஆகியவற்றின்மூலம் பிணக்குகள் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் பொதுமக்கள் நேரடியாக மத்தியஸ்த சபைக்குக் கொண்டுவந்த பிரச்சினைகளை விடவும், ஏனைய நிறுவனங்கள் வழியாக கொண்டுவரப்பட்ட பிணக்குகளே அதிகளவில் காணப்பகின்றன. அத்துடன் இப்பிரச்சினைகள் கடந்த ஆண்டுகளில் அதிகரித்துச் செல்கின்றமையை ஆய்வு வெளிப்படுத்துகின்றது. இவ்வகையில், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மத்தியஸ்தசபைக்கு கொண்டுவரப்பட்ட வழக்குகள் தொடர்பாக நோக்கும்போது நிந்தவூர் மத்தியஸ்த சபைக்கு கடந்த10 வருடத்திற்குள் இப்பிரதேசத்தில் மத்தியஸ்த சபைகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ள பிரச்சினைகள் அதிகரித்துச் சென்றுள்ளன. அதே போல் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மத்தியஸ்தசபைக்கு கொண்டுவரப்பட்ட பிரச்சினைகளின் வடிவங்கள் பற்றி ஆராய்கின்றபோது,

**பிரச்சினைகளின் வகைகள்**

இலகுவாகத்தீர்க்கப்படுவதற்காகவும், விரைவாக மக்கள் தீர்வுகளைப் பெறுவதற்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமையால் இவற்றிற்கு ஏற்றால்போல பிணக்குகள் பல்வேறு நிறுவனங்கள் வழியாக மத்தியஸ்தசபைக்கு கொண்டுவரப்படுகின்றன. இலங்கை அரசானது மத்தியஸ்த சபையினை சிறந்த வினைத்திறனான விளைவுகளை எதிர்பார்த்து நாடு முழுவதும் அறிமுகம் செய்தது. பிரச்சினை தீர்ப்பதற்கும், நீதிமன்றங்களில் வழக்குகள் எஞ்சுவதை தவிர்ப்பதற்கும், நீதியை நிலைநாட்டவும், சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் உருவாக்கப்பட்டுள்ளது (Jabbar , 2012).




| | |
|---|---|
| A- கடன் தொடர்பான பிரச்சினைகள் | B - வன்முறை சார் பிரச்சினை |
| C- பணக்கொடுக்கல் வாங்கல் | D- திருமணக் கொடுக்கல் வாங்கல் (நகை,பணம் கொடுக்கல் வாங்கல்) பிரச்சினை |
| பிரச்சினை | F- சீட்டுப் பணம் தொடர்பான பிரச்சினைகள் |
| G- காணி தொடர்பான பிரச்சினைகள் | H- எல்லை, பொது வேலி தொடர்பான பிரச்சினைகள் |
| I- ஏசுதல் | J- வளவிற்குள் அத்துமீறல் தொடர்பான பிரச்சினை |
| K- அச்சுறுத்தல் | L- குடும்பப் பிரச்சினைகள் |
| M-பாதை தொடர்பான பிரச்சினைகள் | N- சொத்து தொடர்பான பிரச்சினைகள் |
| O- தொழில் தொடர்பான பிரச்சினைகள் | P-விபத்து தொடர்பான பிரச்சினைகள் |
| Q-கூலி கொடுக்காமை தொடர்பான | R- வாடகை தொடர்பான பிரச்சினைகள் |
| S- சொத்துரிமை தொடர்பான | T- நஷ்ட ஈடு தொடர்பான பிரச்சினைகள் |

**வரைபு : 04** 2014முதல் 2019 வரையான காலப்பகுதிக்குள் கொண்டு வரப்பட்ட பிரச்சினைகள்.

**மூலம்:** கள ஆய்வுத் தகவல் , 2021

மேலே உள்ள ஞீளுஞ பகுப்பாய்வின் பிரகாரம், வரையப்பட்ட இவ்வரைபின் படி இச்சபைக்கு கொண்டு வரப்படும் பிணக்குகளில் கடன் தொடர்பான பிணக்குகளே மிக அதிக அளவில் காணப்படுகின்றன. அதிலும் பொதுமக்களிடம் இருந்து வந்த கடன் தொடர்பான பிணக்குகளை விட வங்கி மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களிடம் இருந்தே கடன் பிணக்குகள் அதிகமாகும். முஸ்லிம் மக்கள் அதிகளவான குடிமக்களாக கொண்டிருக்கும் இப்பிரதேசத்தில் கடன் கொடுப்பதற்காக வாக்களிக்கப்பட்டு மீறுகைகள் இடம்பெறுவதும் அவதானிக்கத்தக்கது.


ISBN 978-624-5736-14-0

**நிதிதொடர்பான பிரச்சினைகள்:**

இலங்கையில் ஆண்டின் மத்தியஸ்த சபைகளின் சட்ட அறிக்கையின் பிரகாரம் (1998) தன்னார்வ பரிந்துரையாக அதாவது பிணக்குகளை நேரடியாக தமக்குரிய பிரதேசத்தின் மத்தியஸ்த சபைகளை நாடுதல் என்ற வகைக்குள் நிலம் தொடர்பான, பணம் தொடர்பான பிரச்சினைகளும். கட்டாய பரிந்துரையின் அடிப்படையில், (சமூகப் பிரச்சினைகளாக ) சொத்து தொடர்பான பிணக்குகள் குறிப்பாக, சொத்து தொடர்பான ரூபா 25,000 ரூபாய்க்கு அதிகரிக்காத படியான சொத்துக்கள் தொடர்பாகவும், மேலும் சுப்ரீம் கோர்ட் மூலம் அனுமதிக்கப்பட்ட சில குடும்ப வழக்குகள் தொடர்பாகவும் அடிப்படை உரிமைகள் தொடர்பாகவும் வரும் பிரச்சினைகள் இவ்வகையில் அடங்குகின்றன. கட்டாய பரிந்துரையின் அடிப்படையில்( குற்றவியல் விவகாரங்களாக) சொத்து ரீதியான குற்றம், தாக்குதல்கள் போன்ற பிரச்சினைகள் உள்ளடங்கும் (Alexander , 2002). நிதி தொடர்பான, காணி விவகாரங்கள் தொடர்பான, வன்முறை, மோசடி, அத்துமீறல், உடமை சேதம் போன்ற பிரச்சினைகள் நிந்தவூர்மத்தியஸ்த சபைக்கு ஆற்றப்படுத்துவதற்கு கொண்டு வரப்படுகின்றன (மாவட்ட மத்தியஸ்த சபை அறிக்கை, 2020).

இவ்கையில் நிந்தவூர் மத்தியஸ்த சபைக்கு கொண்டு வரப்படும் நிதிசம்பந்தமான பிரச்சினைகளை விரிவாக நோக்கினால்,நிதி தொடர்பான பிணக்குகள் எனும் போது தனிப்பட்ட நபர்களுக்கிடையிலான பணம் தொடர்பான பிணக்குகள், தனிநபருக்கும் நிதி நிறுவனங்கள் தொடர்பான பிணக்குகள் ஆகியன இங்கு பிரதான இடம் வகிக்கின்றன. குறிப்பாக, வங்கியுடனான கடன் கொடுக்கல் வாங்கலில் உள்ள பிரச்சினைகள், சீட்டு பணம் கொடுக்காமை, விழுந்த சீட்டு பணம் தருவதாக கூறி பண மோசடி என்பவை காணப்படுகின்றன. இலங்கை மத்தியஸ்த சபை மட்டுமன்றி உலகில் உள்ள நாடுகளில் சிவில் மற்றும் ஒப்பந்த ரீதியான பிரச்சினைகள் என பலவகையான பிணக்குகள் மத்தியஸ்த சபைக்கு கொண்டு வரப்படுகின்றன இத்தகைய அனைத்து வகையான சிவில் வணிக ரீதியான பிரச்சினைகளும் மத்தியஸ்த சபைகளால் தீர்க்கப்படுகின்றன (Tang, 2012).

ஆய்வின் படி, வங்கிகள் மற்றும் ஏனைய கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்தும் மத்தியஸ்த சபைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. கடன் பெற்றுக்கொண்ட பின்னர் சட்ட விதி முறைப்படி செலுத்தாத, வட்டி செலுத்தாத அல்லது மோசடி செயற்பாடுகளில் ஈடுபடும் வங்கி தொடர்பான வாடிக்கையாளர்களுக்கு எதிராக முதலாளியான வங்கி அல்லது நிறுவனமுகாமையாளர் இத்தகைய விடயத்தை மத்தியஸ்த சபைக்கு கொண்டுவருகின்றார்.

கடனிற்கான சட்டம் மீறப்படல், நம்பிக்கை ரீதியான மோசடி, ஏமாற்றுதல், வங்கியுடன் உரிய கடன் நிபந்தனைகளை பேணாமை போன்ற காரணங்களினால் இத்தகைய கடன் தொடர்பான பிரச்சினைகள் அதிகம் காணப்படுகின்றன.

மேலும் சீட்டுப்பொருள் கொடுக்கல்வாங்கல்கள், குடும்பப்பிரச்சினை, காணிஉறுதி விவகாரம் திருமணத்தின்போதான பணம், நகை, பொருட்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் என்ற வகைகளில் வரும் ஏனைய நிதிசார் பிரச்சினைகளும் பொதுமக்களிடமிருந்து மத்தியஸ்த சபைக்கு கொண்டு வருவதால் பொதுமக்களின் புறத்திலிருந்தும் நிதி பிணக்குகள்


ISBN 978-624-5736-14-0

கொண்டு வரப்படுகின்றன. இவ்வகையில் இப்பிரதேசத்தில் நிதி தொடர்பான பிரச்சினைகள் அதிகளவில் மத்தியஸ்தசபைக்கு கொண்டுவரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பெரும்பாலும் வட்டி தொடர்பான கடன் பிணக்குகள் காணப்படுவதாகவும் எனவே இஸ்லாமிய மார்க்கத்துக்கு புறம்பான நடைமுறைகளின் மூலம் ஏற்படும் பிணக்குகளை மத்தியஸ்த்தம் செய்வது முஸ்லிம் மத்தியஸ்தர்களிற்கு பெரும் அதிருப்தியை கொடுக்கின்றது. மேலும் இரண்டாவது அதிகப்படியான பிணக்குகளாக வன்முறை சார் பிணக்குகள் நிந்தவூர் பிரதேச மக்களுக்கு மத்தியில் காணப்படுகின்றன.

**வன்முறை** தொடர்பான பிணக்குகள் எனும் போது ஏசுதல், அடித்தல், சண்டை, காயப்படுத்தல், அடிக்க முனைதல், தவறான வார்த்தைப் பிரயோகம், குற்ற முறையாக அத்துமீறுதல், அவமானப்படுத்தல், அச்சுறுத்தல் ஆகிய வன்முறை செயற்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளானது இங்கு அதிகளவில் மத்தியஸ்தம் செய்யப்படுகின்றன. ஆய்வின் படி, இத்தகைய பிரச்சினைகள் அதிகளவில் வீட்டு வன்முறைசார்ந்நதாகவும், ஏனையவை குடும்ப உறுப்பினர்கள் சார்ந்நதாகவும் காணப்படுகின்றன.

**காணி** விவகாரங்கள் எனும் போது சொத்துரிமை. காணி, உறுதி, எல்லைப் பிரச்சினை, பாதை பிரச்சினை, வாழ்வாதார உரிமை மீறல், அயலவர் தொல்லை, வாடகை குத்தகை தொடர்பான பிரச்சினைகள் ஆகியவை அதிகளவில் காணப்படுகின்றன. இத்தகைய பிரச்சினைகளும் குடும்பத்திற்குள் இடம்பெறுகின்றதாகக் கண்டறியப்பட்டுள்ளன அதே போல,

**குடும்ப பிணக்குகள்** எனும் போது திருமணத்தின்போதான பணம், நகை, பொருள் தொடர்பான பிரச்சினைகள், பாதுகாப்பின்மை போன்றனவும் ஏனைய வகைகளில் காசோலை தொடர்பான, சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான, விபத்து தொடர்பான பிரச்சினைகளையும் குறிப்பிடலாம். இத்தகைய சமூகப் பிரச்சினைகள் நிந்தவூர் மத்தியஸ்த சபைக்கு கொண்டுவரப்படுகின்றன. ஹாங்காங் போன்ற நாடுகளில் குடும்ப பிரச்சினைகளை தீர்க்க பிரச்சினைகளை எளிய வழியில் ஆரம்ப கட்டத்திலேயே தீர்க்க குடும்ப மத்தியஸ்த சபை என்ற தனியான மத்தியஸ்த சபை இயங்கிக் கொண்டிருக்கின்றன (Alexander , 2002). மேலும், இஸ்லாமிய நாடுகளிலும் இத்தகையபிரச்சினைகள் மத்தியஸ்த சபைகளுக்கு தீர்வுகளிற்காக வருவதனை அடையாளம் காண முடிகின்றது. உதாரணமாக, மலேசிய மத்தியஸ்தசபைகளுக்கு 86% விவாகரத்து, சிறுவர் பராமரிப்பு, குடும்ப விவகாரம் தொடர்பாகவும் 80மூ நில உரிமை, வாடகை தொடர்பாகவும் 78மூ சிறிய பிணக்குகள் ,மற்றும் 70மூ சொந்தப் பிரச்சினைகள்,வாகன விபத்துக்கள்தொடர்பாகவும் 60மூ ஒப்பந்தங்கள் மற்றும் வர்த்தக விடயங்கள் மத்தியஸ்த சபைகளுக்கு கொண்டுவரப்படுகின்றன (Deluma , 2018). எனவே ஆய்வுப் பிரதேசத்திலும் சமூகப்பிரச்சினைகளில் மேற்குறிப்பட்டது போன்ற பிரச்சினைகள் கொண்டுவரப்படுவதனை அடையாளப்படுத்த முடிகின்றது.

**முடிவுரை**

ஆய்வின்படி, நிந்தவூர் மத்தியஸ்த சபைக்கு வருடாந்தம் சராசரியாக சுமார் 357 பிணக்குகள் வந்தடைகின்றன. கடந்த10 வருடங்களில் அவதானிக்கின்றபோது, வருடாந்தம் சமூகப்பிணக்குகள் அதிகரித்து வந்துள்ளமையை ஆய்வு முன்வைக்கின்றது. அத்துடன்

இத்தகைய பிரச்சினைகள் பொதுமக்களின் ஊடாகவும், வங்கிமூலமாகவும், பொலிஸ் நிலையங்கள் மூலமாகவும், நீதிமன்றங்கள் மூலமாகவும் வந்தடைகின்றன. இவற்றில் நிதிசார் பிரச்சினைகள் அதிகளவானதாகக் காணப்படுகின்றன. அடுத்து வன்முறை சார் பிரச்சினைகளும் காணிப் பிரச்சினைகளும் காணப்படுகின்றன. எனவே ஆய்வின்படி, மத்தியஸ்தசபைகள் பிணக்குகளைத் தீர்க்கின்ற பணிகளில் ஈடுபட்டுவருகின்ற அதே வேளை, பிணக்குகளின் எண்ணிக்கைகளும் அதிகரித்து வருகின்றன. எனவே எதிர்கால ஆய்வுகள் இத்தகைய பிணக்குகளின் எண்ணிக்கைகளை இழிவளவானதாக மாற்றுவதற்காக பிணக்குகள் அதிகரிப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றிற்கான வழிமுறைகளை முன்வைக்கின்ற ஆய்வுக் கண்டுபிடிப்புக்களை முன்வைக்க இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

## References


Abdul Jabbar, M. & Manivasagar, A.V. (2012). The effectiveness of community mediating role at rurel level area in ampara distric in Sri Lanka: Research Submitted to 2nd International Symposium of South Eastern University of Sri Lanka.

Alwi Abdul Wahab. (2013). Court annexed and judge -led mediation in civil cases: The Malaysian experience, Victoriya University of Melbourne. Retrived from, https://vuir.vu.edu.au/24331/1/Alwi%20Abdul%20Wahab.pdf .

Annable Shaw. (2014). Mediation Advocacy, Faculty of Law, Victoriya University of Wellington.

Cyrene Sriwardhana. (2011). Evaluation of the Community Mediation Boards Programe In Sri Lanka 2011 January - Ministry Of Justice, Sri Lanka. Retrived from, http://mediation.gov.lk/static/media/publications/en/Evaluation_Community_Mediation.pdf on 25 of June 2021.

Dinesh.R. (2019). A Research Peper on Study and Analysis of Alternative Disputes Resolution. International Educational Applied Research Journal, Sweetha University, Poonamallee, Channai, India.

Joseph A.L., & Cooray. (1995). Costitutional and Administrative law of Sri Lanka: Sumathi Publishers, Colombo.

Nadja Alexander, (2002).From Communities to Corporations -The Growth of Mediation in Sri Lanka. Retrived from, https://www.mediate.com/articles/alexander.cfm on 25th of June 2021.



ISBN 978-624-5736-14-0

Tang Houzhi, World Wide Use of Mediation. Retrived from Https://Www.Cityu.Edu.Hk/Slw/Adr_Moot/Doc/Worldwide_Use_Of_Mediation_(By_Prof_Tang_Houzhi).Pdf On 26th Of June 2021.

The Govermment of Sri Lanka Introdused a Community Mediation Board Programme In 1990 Under the Administratiion of the Ministry of Justice (Moj), (2013).Jsrp Paper 4 Community Mediation and Social Harmony in Sri Lanka Valters: Sri Lanka. Retrived from http://eprints.lse.ac.uk/56356/1/JSRP_Paper4_Community_mediation_and_social_harmony_in_Sri_Lanka_Valters_2013.pdf on 25th June 2021.

Yuk Ki Lee, &Avnita Lakhani, The Case for Mandatory Mediation to Effectively Address Child Custudy Issues In Honk Kong'', City of Honk Kong School of Law Hong Kong SAR, China .Retrived from http://lawfam.oxfordjournals.org/. on 26th June 2021.

இலங்கையின் நீதிதுறை சேவையில் மத்தியஸ்த சபைகளின் பங்கு விசேட ஆய்வு -நிந்தவுர் மத்தியஸ்த சபை .(2004).Research Submitted To The Department of science of the south eastern university of Sri Lanaka in partial fulfilment of the requirement for the award of the special degree of bachelor of arts ,Oluvil ,Sri Lanka .

சமுக கல்வியும் வரலாறும் -11 ஆம் தரம் (2002),தேசிய கல்வி நிறுவகம் ,கல்வி வெளியீடு திணைக்களம்,பத்தரமுல்லை.

மத்தியஸ்தர்களிற்கான நாட்குறிப்பேடு(2003),நீதி சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு,கொழும்பு.

1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டம்(1988),இலங்கை அரசாங்க அச்சுத்திணைக்களம்,கெழும்பு.

Key Informant Interviewers

1. பிரதேச செயலாளர்,பிரதேச செயலகம்,நிந்தவூர்.
2. எம். சபாத் அகமட் ,மத்தியஸ்த சபை உறுப்பினர்,நிந்தவூர்.(2021.05.12).
3. அப்துல்.ம.பல்கீஸ்,தவிசாளர், மத்தியஸ்த சபை, நிந்தவூர்.(2021.05.07).